RNI-N0: TNTAM/2021/83936

9842961596, 9384761596
ஹோட்டல் ஸ்ரீ பழனிஸ் சைவம்
HOTEL SREE PALANIS Veg
உணவு ஆர்டர் தேவைக்கு : 80980 97273
மேல்கரை மெயின் ரோடு - மானாமதுரை

# மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

கார்த்திக் மருத்துவமனை
மனோ CT ஸ்கேன்
24 மணி நேர சேவை
சிவகங்கை
Dr.மணிவண்ணன் MBBS.,MD.,
Dr.கார்த்திக்ராஜன் MS.,
No 28 மதுரை ரோடு - சிவகங்கை 630 561 Ph : 04575 241 604, 246516 Cell: 9442341604, 8015741604

சிவகங்கை | மலர்-4 | இதழ்-20 | 20 ஜனவரி | திங்கட்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தரமதிப்பீட்டில் A+ (CGPA:3.64) தகுதியும்
மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவால் முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சி தகுதியும் பெற்றது.)



காரைக்குடி - 630 003

## திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் மற்றும் அய்யன் திருவள்ளுவர் திருவுருவச்சிலை திறப்புவிழா

அன்புடையீர்,

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2056, தைத்திங்கள் 8-ஆம் நாள் (21.01.2025) செவ்வாய்க்கிழமை, காலை 11.15 மணியளவில் அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ள விழாவில்

**தமிழ்நாடு முதலமைச்சர்**

மாண்புமிகு திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகத்தையும் அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையையும் திறந்து வைத்து

**விழாப் பேருரையாற்றவும்**

முன்னாள் மத்திய நிதியமைச்சர்

மாண்புமிகு திரு. **ப.சிதம்பரம்** அவர்கள்

**நோக்கவுரையாற்றவும்**

கவிப்பேரரசு **வைரமுத்து** அவர்கள்

**விழாச் சிறப்புரையாற்றவும்**

உயர்கல்வித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

மாண்புமிகு முனைவர். **கோவி. செழியன்** அவர்கள்

இணைவேந்தர் அழகப்பா பல்கலைக்கழகம்

**முன்னிலை வகிக்கவும்**

மற்றும்

மாண்புமிகு திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள்
நிதி மற்றும் மனிதவள மேலாண்மை, சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

மாண்புமிகு திரு. **எஸ்.ரகுபதி** அவர்கள்
சட்டத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

மாண்புமிகு திரு. **கே.ஆர்.பெரியகருப்பன்** அவர்கள்
கூட்டுறவுத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

மாண்புமிகு திரு. **மு.பெ.சாமிநாதன்** அவர்கள்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

மாண்புமிகு திரு. **ஆர்.எஸ்.கண்ணப்பன்** அவர்கள்
பால்வளத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

மாண்புமிகு திரு. **சிவ.வீ.மெய்யநாதன்** அவர்கள்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

திரு. **கார்த்தி ப சிதம்பரம்** அவர்கள்
சிவகங்கைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்

திரு. **எஸ்.மாங்குடி** அவர்கள்
காரைக்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

சிவகங்கை மாவட்ட ஆட்சியர்

திருமதி. **ஆஷா அஜித்** அவர்கள்

ஆகியோர் முன்னிலை வகிக்கவும்

**அன்புடன் இசைந்துள்ளார்கள்.**

இவ்விழாவிற்குத் தாங்கள் வருகை புரிந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

முனைவர். **அ. செந்தில்ராஜன்**
பதிவாளர்

பேராசிரியர் **க. ரவி**
துணைவேந்தர்

**ஆட்சிக்குழு உறுப்பினர்கள்**

விழாவிற்கு வரும் விருந்தினர்கள் அழைப்பிதழைக் கண்டிப்பாகக் கொண்டுவர வேண்டும்.

## சூராணத்தில் குடிநீர் குழாய் உடைப்பு சரி செய்ய கோரி வாகனங்களை சிறைபிடித்த பொதுமக்கள்



சிவகங்கை ஜன20

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே உள்ள சூராணத்திலிருந்து சூரிய கோட்டை கிராமத்திற்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூபாய் 5,300,000 கோடி மதிப்பீட்டில் ரோடு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் ஆக்கவயல் கிராமத்திற்கு செல்லும் காவிரி கூட்டு குடிநீர் திட்ட குழாயை சேதப்படுத்தியதை தொடர்ந்து கடந்த 2 மாத காலமாக ஆக்க வயல் கிராமத்திற்கு குடிநீர் வராத காரணத்தினால் கிராம மக்கள் குடிநீர் கிடைக்காமல் வாகனங்களில் வரும் குடிநீரை விலை கொடுத்து வாங்கி வருகின்றனர். இந்நிலையில் இப்பகுதியில் உள்ள ஒரு பாலத்தை வேலை பார்ப்பதற்காக வந்த ரோடு போடும் பணியாளர்களை ஆக்கவயல் கிராம மக்கள் முற்றுகையிட்டு வாகனங்களை சிறைபிடித்தனர்.

காவிரி கூட்டு குடிநீர் திட்ட குழாயை சரி செய்ய வேண்டுமென்றும், மேலும் பாலம் வேலை பார்க்கும் போது அதற்கு மாற்றாக மாற்றுப்பாதை அமைக்காமல் வெறும் களி மண்ணை மட்டும் கொட்டி இருப்பதால் மக்கள் நடந்து கூட செல்ல முடியாத நிலை இருப்பதை கண்டித்தும் கிராம மக்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து சாலைக்கிராமம் காவல் ஆய்வாளர் இன்ஸ்பெக்டர் லோகநாதன் மற்றும் காவலர்கள் ,அதிகாரிகள் கிராம மக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார் பின்னர் ஒப்பந்ததாரர் குழாய் உடைப்பை சரி செய்த பின்னரே மற்ற பணிகளை தொடங்குவோம் என உறுதி அளித்ததாக கூறப்படுகிறது. அதன் பின்னரே மக்கள் கலைந்து சென்றனர்.

## தாம்பரத்தில் ஆண்டியப்பன் யோகா அகடாமி சார்பில் நோவா உலகசாதனை நிகழ்ச்சி




தாம்பரம் ஜன.20

தாம்பரத்தில் ஆண்டியப்பன் யோகா அகடாமி சார்பில் நடந்த நோவா உலகசாதனை நிகழ்ச்சியில் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு யோகாசனங்களை செய்து உலகசாதனை படைத்தனர்.

கிழக்கு தாம்பரத்தில் உள்ள தனியார் பள்ளியில் ஆண்டியப்பன் யோகா அகடாமி சார்பில் குடியரசு தினத்தை முன்னிட்டு யோகா குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நோவா உலக சாதனை நிகழ்வு ஜனவரி 19ம் தேதி காலை நடைப்பெற்றது.

ஆண்டியப்பன் யோகா அகடாமி நிர்வாகிகள் ருக்மணி, ஹேமா தேவி, சுப்பிரமணி, செல்வகனபதி மற்றும் துர்காதேவி ஆகியோர் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் சுமார் 300க் கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பல குழுக்களாக உஸ்ட்ராசனம், வாட்டாயா னாசனம், விருச்சிகாசனம் ஆகிய யோகாசனங்களை செய்து உலகசாதனை படைத்தனர்.

அதனை தொடர்ந்து 5 தனிநபர்களின் உலகசாதனை நிகழ்ச்சியும் நடைப்பெற்றது. இதில் ஜெய துர்ஹா என்ற மாணவி 6 அடி உயரத்தில் கயிறு மீது ஏறி 6 நிமிடம் தொடர்ந்து ஏக பாத ராஜ கபோதாசனம் செய்து அசத்தினர். மேலும் சிறுவர் கவிந்தர் மற்றும் சிறுமி கோஷிகா, லகு வஜ்ராசனத்தையும், முருகவேல் என்ற மாணவர் வாட்டாயானாசனத்தை 30 நிமிடம் செய்து அசத்தினர். அதேபோல் ஷம்ரிதா என்ற மாணவி தலைகீழாக பூர்ண தனுராசனத்தை தொடர்ந்து 3 நிமிடம் செய்து காட்டியது பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

இந்த சாதனைகளை நோவா உலகசாதனை நிறுவனத்தின் தலைமை எடிட்டர் ராஜ்குமார் தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்து உலக சாதனையாக அங்கீகரித்தனர். அதனை தொடர்ந்து சாதனை படைத்த மாணவிகளுக்கு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மகாராஜன், சபரி அருணா, கலைவாணி, மாமன்ற உறுப்பினர் ராஜா ஆகியோர் உலக சாதனை சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகள் வழங்கி பாராட்டினர்.

## சென்னை புறநகர் மாவட்டம் சார்பாக எம்.ஜி.ஆர். பிறந்தநாள் விழா - மாபெரும் பொதுக்கூட்டம்





சோழிங்கநல்லூர் ஜன20

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகரில் எம்.ஜி.ஆர்.108 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் சென்னை புறநகர் மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.கந்தன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரமான எடப்பாடி கே. பழனிச்சாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட, வட்ட, ஊராட்சி, ஒன்றிய, கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சியில் காஞ்சிபுரம் வரமகாலட்சுமி சில்க்ஸ்-ன் புதிய கிளை திறப்பு




திருச்சி, ஜன 20:

காஞ்சிபுரம் வரமகாலட்சுமி சில்க்ஸ், தனது 67 வது, பிரத்தியேக கிளையை திருச்சி, சாஸ்திரி சாலையில் திறந்துள்ளது. இந்த புதிய கிளையை ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீ எம்பார் ஜீயர், மடாதிபதி ஸ்ரீ அப்பன் உலகரிய ராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள் திறந்து வைத்தார். இந்த கடையில் பனாரசி, படோலா, கோட்டா, காஞ்சிபுரம், பைத்தானி, ஆர்கன்சா மற்றும் குப்பதம் போன்ற பல்வேறு வகையான புடவைகள் உள்ளிட்ட பிரீமியம் தயாரிப்புகள் உள்ளன..

சாய் சில்க்ஸ் கலாமந்திர் லிமிடெட் நிர்வாக இயக்குநர் பிரசாத் சலாவடி கூறுகையில், “எங்கள் வரமகாலட்சுமி ஸ்டோர்கள் தனித்துவமான அனுபவத்தையும் வாடிக்கையாளர் சேவையையும் வழங்குவதாக நாங்கள் நம்புகிறோம். இது எங்கள் சேலைகள், பல்வேறு இருப்பு வைப்பு யூனிட்டுகளுடன் இணைந்து, வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தளத்தை ஈர்க்கவும் தக்கவைக்கவும் உதவுகிறது. தென்னிந்தியா முழுவதும் 25 கூடுதல் ஸ்டோர்களை திறக்க உத்தேசித்துள்ளோம். அடுத்த இரண்டு நிதியாண்டுகளில் திட்டமிடப்பட்டுள்ளன’ என்றார்.

வரமகாலட்சுமி ரீடெய்ல் பிராண்ட் வடிவம் 2011 ஆம் ஆண்டு பெங்களூரு சிக்பெட்டில் முதல் கடை திறப்புடன் தொடங்கப்பட்டது. பின்னர் பெங்களூரு, ஐதராபாத், சென்னை, விஜயவாடா, நெல்லூர் போன்ற நகரங்களில் தொடங்கப்பட்டது. மேலும் காஞ்சிபுரம் கலாச்சாரத்தில் பிராண்டின் வேர்களை பிரதி பலிக்கின்றன. இது கைத்தறி புடவை வியாபாரத்தை புதுப்பித்து, காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் மற்றும் பிற கைத்தறி மற்றும் நிகழ்வுகளுக்கான புடவைகளை ஒரே கூரையின் கீழ் வழங்குகிறது.

சாய் சில்க்ஸ் என்பது கலா மந்திர், வரமகாலட்சுமி சில்க்ஸ், மந்திர் மற்றும் கேஎல்எம் ஃபேஷன் மால் உள்ளிட்ட நான்கு ஸ்டோர் வடிவங்களை கொண்டுள்ளது. இது சந்தையின் பல்வேறு பிரிவுகளுக்கு தயாரிப்புகளை வழங்குகிறது. இதில் பிரீமியம் எத்னிக் ஃபேஷன், நடுத்தர வருமான பிரிவினருக்கான எத்னிக் பேஷன் மற்றும் மதிப்பு பேஷன் ஆகியவை அடங்கும். வெவ்வேறு விலைகளில் பல்வேறு தயாரிப்புகளுடன் அனைத்து சந்தை பிரிவுகளிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு ஆடைகளை வழங்குகிறது.

## வேலூரில் பள்ளி ஆசிரியர், மாணவியிடம் பாலியல்துன்புறுத்தலும் தனியார் பள்ளி நிர்வாக கபட நாடகங்களும்



வேலூர் ஜன20

வேலூரில் பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தனியார் பள்ளி ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, கொணவட்டம் பகுதியைச் சேர்ந்தவர் ஆசிரியர் முகமது சாலிஹா (வயது 35), இவர் மலைக்கோடியில் இயங்கி வரும் ஸ்பார்க் மெட்ரிகுலேசன் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் பள்ளியில் பயின்று வரும் பத்தாம் வகுப்பு மாணவியிடம் குளிக்கும் போது வீடியோ கால் செய்ய வேண்டும் எனவும், செய்யாவிட்டால் தேர்வில் மதிப்பெண் வழங்க மாட்டேன் எனவும் மிரட்டியுள்ளார். இதனால் போட்டோக்களையும் அனுப்பியதாக தெரிகிறது. இந்நிலையில் சில நாட்களுக்கு முன்னர் உல்லாசத்திற்கு அழைத்ததாகவும் கூறப்படுகிறது. இதனை வீட்டில் உள்ளவர்களுக்கு கூறினால் மதிப்பெண் வழங்க மாட்டேன் என மிரட்டியுள்ளனர்.

16ஆம் தேதி வியாழக்கிழமை இம்மாணவி மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி வீட்டில் இருந்த தூக்க மாத்திரையை அதிகமாக தின்று தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார். இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர்கள் என்ன ஆனது என கேட்டுள்ளனர். மன உளைச்சலுக்கு ஆளான மாணவி தனது தாயாரிடம் ஆசிரியரால் தனக்கு நடந்த பாலியல் தொல்லை குறித்து கதறி அழுதபடி கூறியுள்ளார்.

இதுகுறித்து மாணவியின் தாயார் வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்த நிலையில், இதன் அடிப்படையில் வேலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் தமிழரசி தலைமையிலான காவல் துறையினர், சம்பந்தப்பட்ட ஆசிரியர் முகமது சாலிஹா மீது தீவிர விசாரணை மேற்கொண்டு, விசாரணைக்குப் பின் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர்.

## தேனியில் ஜோஸ் ஆலுக்காஸ் ஜுவல்லரி 6 ஆம் ஆண்டு விழா தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி பங்கேற்பு






தேனி ஜன20

தேனிமதுரை ரோடு பங்களா மேட்டில் ஜோஸ் ஆலுக்காஸ் ஜுவல்லரி 6 ஆம் ஆண்டு விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு தேனி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. வடக்கு மாவட்ட செயலாளருமான தங்க தமிழ்ச்செல்வன்,பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக் குமார்,பிரபல திரைப்பட நடிகை சிருஷ்டி டாங்கே ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி கேக் வெட்டினர்.

இந்நிகழ்விற்கு தேனி அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. முத்துசித்ரா, வர்த்தக சங்க தேனி மாவட்ட தலைவர் செல்வ குமார்,தமிழ்நாடு புதுச்சேரி வழக்கறிஞர்கள் பார் கவுன்சில் மண்டல தலைவர் வழக்கறிஞர் முத்துராமலிங்கம்,திமுக நகர் கழக செயலாளர் நாராயண பாண்டியன்,ஜோஸ் ஆலுக்காஸ் ஜுவல்லரி நிறுவன மேலாளர் கிரேசியஸ்,தேனி கிளை மேலாளர் தேவராஜ்,உதவி மேலாளர் சசிக்குமார்,கணக்கு மேலாளர் சோபின் மேத்யூ , வர்த்தக சங்க பிரமுகர்கள் மற்றும் ஜோஸ் ஆலுக்காஸ் ஜுவல்லரி நிறுவன பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.தேனி அரசு மருத்துவ மனை மற்றும் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.முத்து சித்ராவிடம் மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகள் காத்திருப்பு நிழற்குடை அமைப்பதற்காக ரூ.5,53,500 / காசோலையாக ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தின் சார்பில் வழங்கினர்.

## வேலூரில், கோட்டை பின்புறம் ஜெயின் கோசலா மாட்டுப் பண்ணையில், மாட்டுப் பொங்கல் திருவிழா!!



வேலூர், ஜன.20

வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி, நவநீத அம்மன் கோயில் தெரு, கோட்டை பின்புறம் (மேற்கு), பாரதியார் சாலையில் ஜெயின் கோசலா மாட்டுப் பண்ணையில், மாபெரும் மாட்டுப் பொங்கல் திருவிழா ஜெயின் கோசாலா அறக்கட்டளைத் தலைவர் விமல் சந்த் ஜெயின் தலைமையிலும், செயலாளர் தர்மராஜ், அறங்காவலர் ருக்ஜி ராஜேஷ் முன்னிலையில் மாபெரும் மாட்டுப் பொங்கல் திருவிழா நடைபெற்றது.

இவ்விழாவில் ஜெயின் கோசாலா நிர்வாக குழுவினர்களுடன் அலங்கரிக்கப்பட்ட அனைத்துமாடுகளுக்கும் சிறப்பு பூஜைகள் செய்து, சாம்பிராணி புகை மனத்துடன், கற்புரம் ஆர்த்தி காண்பித்து மலர்கள் தூவி வணங்கி வழிபட்டனர். இதனைத் தொடர்ந்து மாடுகளுக்கு பழங்கள், கரும்புகள், தீவனப்பயிர்கள், அகத்திக்கீரை, பொங்கல் என அனைத்து மாடுகளுக்கும் பல்வேறுவிதமான பழங்கள் மற்றும் தீவனப் பயிர்களை உணவாக வழங்கினர். இம்மாட்டுப் பொங்கல் திருவிழாவில் ஜெயின் குழுவின் குடும்பங்கள், சமூக ஆர்வலர்கள், தன்னார்வலர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு மாட்டுப் பொங்கல் திருவிழாவை சிறப்பித்து

மகிழ்ந்தனர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தது. இறுதியில் ஜெயின் கோசாலா குழுவின் சார்பில் இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து மாட்டுப் பொங்கல் திருவிழா நிறைவுபெற்றது.






சிவகங்கையில் மிக பிரம்மாண்டமான குத்துச்சண்டை, உதை குத்து சண்டை பயிற்சி நிலையம் மற்றும் சிவகங்கை மாவட்ட கிக் பாக்சிங் சங்க தலைமை அலுவலக திறப்பு விழாவில் சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி. எம் துரை ஆனந்த் ஃபயர் ஸ்டோர்ம் குத்துசண்டை பயிற்சி நிலையத்தை துவக்கி வைத்தார். மேலும் தேசிய அளவில் சர்வதேச அளவில் சாதனை புரிந்த மாணவர்களுக்கு வாழ்த்துக்களின் பாராட்டுகளையும் தெரிவித்தார். உடன் சிவகங்கை மாவட்ட கிக் பாக்ஸிங் சங்க செயலாளர் ச குணசீலன், பொருளாளர், ஆ.உமா மகேஸ்வரி மற்றும் துணைச் செயலாளர் சு.சித்ரா மற்றும் லிட்டில் பிளவர் நர்சரி பள்ளி தாளாளர் ஜெயக்குமார் மற்றும் துணைப் பொருளாளர் சங்கிலி, மற்றும் விக்னேஷ் மற்றும் பலர் பங்கேற்றனர்.

## காஞ்சி திமுக வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாணவரணி செயற்குழு கூட்டம்

கிண்டி ஜன20

காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞர் அணி மற்றும் மாணவரணி செயற்குழு கூட்டம் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.




இந்நிகழ்ச்சி காஞ்சி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு ஏற்பாட்டில் நடைபெற்றது, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தையூர் வி.விஜயகுமார், ராமமூர்த்தி, மணிகண்டன், ஜானகிராமன் மற்றும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் கலாநிதி குணாளன் விக்கி (எ) விக்னேஸ்வரன் வே.சங்கீதா எஸ்.ஜெகதீப், ஜெகன் தேவேந்திரன் முன்னிலையிலும் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஎஸ்.சத்தியபிரபு, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பிரபு கார்த்திக் சிவசுப்பிரமணியம் ராஜேஷ் மற்றும் ஒன்றிய பகுதி நகர பேரூர் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## விதிமீறிய வாகனங்களை பறிமுதல் செய்து கன்னியாகுமரி போக்குவரத்து காவல்துறை நடவடிக்கை

கன்னியாகுமரி, ஜன.20

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவுப்படி கன்னியாகுமரி காவல்துறை காவல் துணை கண்காணிப்பாளர் மகேஷ் குமார் மேற்பார்வையில் கன்னியாகுமரி போக்குவரத்து காவல் ஆய்வாளர் பிரபு போக்குவரத்து உதவி ஆய்வா ளர் ஜெயபிரகாஷ் மற்றும் போக்குவரத்து காவலர்கள் கன்னியாகுமரி ரவுண்டானா மற்றும் ஜீரோ பாய்ண்ட் பகுதியில் வாகன தணிக்கையின் போது ஓட்டுநர் உரிமம் இன்றியும், நம்பர் பலகை இல்லாமலும், தகுந்த ஆவணங்கள் இன்றியும் ஓட்டி வந்த 22 இருசக்கர வாகனங்களை பறிமுதல் செய்து அபராதம் விதித்தனர்.






பின்னர் ஓட்டுநர் உரிமம் இன்றி வாகனம் ஓட்டிய ஓட்டுநர்கள் அபராதம் விதிக்கப்பட்டு நம்பர் பலகை இல்லாத இருசக்கர வாகனங்களுக்கு உரிய நம்பர் பலகை பொருத்தபட்டும் பின்னர் வாகன ஓட்டிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கி அனுப்பபட்டது.

## திரு ஆவினாங்குடி பாலசமுத்திரம் செல்லும் பாதையில் குவிந்து கிடக்கும் கழிவுகளால் பாதயாத்திரை பக்தர்கள் அவதி

பழனி ஜன.20

திண்டுக்கல் மாவட்டம் பழனி திரு ஆவினாங்குடி பால சமுத்திரம் செல்லும் சாலையில் பாதயாத்திரை வரும் பக்தர்கள் முகம் சுளிக்கும் அளவிற்கு வண்டி வண்டியாக கழிவு குப்பைகள் ஒரு சமூகத்தில் உள்ள சுகாதாரத் தரநிலைகள், அதில் உள்ள சுகாதாரம் மற்றும் பொது சுகாதாரத்தின் அளவுகளுடன் நெருங்கிய தொடர்புடையவை, எனவே, நீண்ட ஆயுள் மற்றும் நோய்களின் அளவு ஆகியவற்றின் அடையக்கூடிய தரங்களுடன், இதனால் சமூகத்தின் உற்பத்தி நிலைகளுடன் நெருக்கமாக தொடர்புடையது. இவை கிடைக்கக்கூடிய வளங்களின் தவிர்க்கப்படக்கூடிய விரயங்களின் அளவையும், கழிவுகள் எனப்படும் கழிவுகள் எந்த அளவிற்கு மதிப்புமிக்க வளங்களாக மீட்கப்படுகின்றன மீண்டும் பயன்படுத்தப்படுகின்றன/



மறுசுழற்சி செய்யப்படுகின்றன என்பதையும் தீர்மானிக்கிறது. சுத்தமின்மை மற்றும் அழுக்கு, அசுத்தம் மற்றும் மாசுபாடு ஆகியவற்றை உள்ளடக்கிய சுகாதாரமின்மை, முக்கிய பொருளாதார விளைவுகளை மட்டுமல்ல, கடுமையான சமூக விளைவுகளையு உண்டாக்கும் விதமாக திருஆவினாங்குடி குலத்து அருகே இளநீர் மட்டைகளும் மேலும் குப்பைகளும் இலைகள் கப்புகள் பிளாஸ்டிக் பொருட்கள் குவிந்து கிடக்கின்றன

இவ்விடத்தில் அசுத்தம் மற்ற நிலையில் காணப்படுகின்றனர் ஆதலால் வெளியூரில் இருந்து வரும் பக்தர்கள் மனம் சுழிக்கும் அளவிற்கு மற்றும் பக்தர்கள் தன் முகத்தினை துணியால் மூடிக்கொண்டு செல்கின்றனர் மேலும் பாதயாத்திரை வரும் பக்தர்கள் அவ்வழியாகத்தான் சொல்கிறார்கள் பக்தர்கள் குப்பைகளை தரையில் கொட்டி விட்டு செல்கின்றன இந்த குப்பைகள் காற்றில் பறந்து குளத்தில் போய் விழுந்து நீரை மாசடைய செய்கிறது ஆகவே தைப்பூசம் பங்குனி உத்திரம் போன்ற திருவிழா காலங்களில் அவ்விடத்தில் குப்பைத் தொட்டி வைக்க பரிசீலனை செய்யவும் . இக்கழிவுப் பொருட்களை உடனே அகற்றவும் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க சமூக ஆர்வலர்களும் பக்தர்களும் கோரிக்கை வைத்துள்ளனர்

## சிவகங்கையில் தாஜ் பிரியாணி பேலஸ் புதிய கடையின் திறப்பு விழா





சிவகங்கை, ஜன.20

சிவகங்கை நகராட்சி உடைசையூர் ஊரணி அருகே தாஜ் பிரியாணி பேலஸ் புதிய கடையின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சிவகங்கை நகர் மன்ற தலைவரும் திமுக நகர் செயலாளர் துரை ஆனந்த் கலந்து கொண்டு சிறப்பித்தார். முதல் விற்பனையை உரிமையாளர் நல்லமுகமது லோட்டஸ் டைல்ஸ் உரிமையாளர் வெங்கடேசன் துவக்கி வைத்தனர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் உயர்தர சுத்தமான மற்றும் சுகாதார முறையில் பிரியாணி வழங்கப்படும் என்பதை உரிமையாளர் நல்ல முகமது தெரிவித்தார். உடன் உள்ளாட்சி அமைப் புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் சிலம்பம் மற்றும் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி

மதுரை: ஜன20

மதுரை பசுமலைபகுதியில் உள்ள மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி உள் விளையாட்டு அரங்கில் சிலம்பம் மற்றும் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது .




இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளையின் சேர்மன் குருசாமி மற்றும் மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கோ.தளபதி போட்டியினை துவக்கி வைத்து வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். இவ்விழாவின் துவக்கத்தில் உரையாற்றிய ஸ்டைல் செப் இந்தியா தலைவர் கார்த்திக் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு வருகின்ற அனைவருக்கும் தினந்தோறும் அன்னதானங்களை நடத்துவதோடு ஏழை எளியவர்களுக்கு உதவி கரம் முதியோர்களின் நலனுக்காக அவர்களின் தேவைகளை அறிந்து நலத் திட்ட உதவிகளை செய்துவரும் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளையின் சேர்மன் குருசாமியை வாழ்த்தி வரவேற்றார்.

அதனை தொடர்ந்து வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கோ. தளபதி பொன்னாடை போற்றி வாழ்த்துக்களை வழங்கினார். உடன் பாக்கியராஜ், சுரேஷ். போட்டியில் கலந்து கொள்வதற்கு ஏராளமான மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சியரின் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்களிடம் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் குறைதீர்க்கும் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள. சங்கீதா பெற்றுக்கொண்டார்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பொதுமக்களிடமிருந்து 264 மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட உயர்பதவி ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் AG சர்ச் 40ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடுவதற்காக போடிநாயக்கனூரில் வ உ சி திடலில் இருந்து ஆரம்பித்து மேளதாளம் முழங்க ஆட்டம் பாட்டத்துடன் ஊர்வலமாக நகரின் முக்கிய வீதிகளில் சென்று AG சர்ச்சையை சென்று அடைந்து தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.


ந.க. ஆ1/7257/2024

### வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்

சிவகங்கை

திருவள்ளூர் மாவட்டம் ராமாபுரம் காமராஜர் சாலை செந்தமிழ் நகர் க/எண்: 3/22 மற்றும் தற்போதைய முகவரி சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் பாகனேரி பஞ்சயத்து பாகனேரி கிராமம் பழையவளவு என்ற முகவரியில் வசிக்கும் திரு. வீ.அழகேசன் என்பவரின் தந்தை வீரப்பன் என்பவர் கடந்த 16.03.1971 அன்று இறந்துவிட்டார் மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை . இந்த இறப்பினை பதிவு செய்ய கேட்டு சிவகங்கை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினைபதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம் அவ்வாறு ஆட்சேபனை எதுவும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவுகள் பிறப்பிக்க கோரப்படும் என்ற விவரம் இதன் மூலம் அறிவிக்கலாகிறது.

எதிர்மனுதாரர்.
1. வட்டாட்சியர் அவர்கள்
சிவகங்கை,வட்டாட்சியர்
அலுவலகம்

மனுதாரர்
திரு.வீ.அழகேசன்
த/பெ வீரப்பன் திருவள்ளூர்
மாவட்டம் ராமாபுரம்
காமராஜர் சாலை செந்தமிழ்
நகர்
க/எண்: 3/22 மற்றும்
தற்போதைய முகவரி
பழையவளவு பாகனேரி
பஞ்சயத்து பாகனேரி
கிராமம் சிவகங்கை வட்டம்
சிவகங்கை மாவட்டம்.
செல்:94442 07365

இப்படிக்கு
ஜி.ராஜேந்திரன் BA,BL
வழக்கறிஞர், சிவகங்கை


## சிவகங்கை மாவட்டத்தில் ஜன.25ல் மக்கள் குறைதீர் நாள்

சிவகங்கை, ஜன.20

சிவகங்கை மாவட்டம் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வருகின்ற 25.01.2025 அன்று சிவகங்கை மாவட்ட முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல். தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் பொது விநியோகத்திட்டத்தில் 2025ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான மக்கள் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் வருகின்ற 25.01.2025 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை சிவகங்கை மாவட்டம் முழுவதும் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை / நகல் அட்டை, கைப்பேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் மற்றும் பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்த புகார்களை தெரிவிக்கும் பொருட்டும் பொதுமக்கள் தாங்கள் குடியிருக்கும் வட்டத்தில் அந்தந்த வட்ட வழங்கல் அலுவலகத்தில் மனு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



நடைபாதை வியாபாரிகள் கடைகள் அறநிலையத்துறை அதிகாரிகளால் சூறையாடப்பட்டதை கண்டித்து மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

# ‘சமூக ஆர்வலர் ஜெகபர் அலி இறப்புக்கு நீதி வேண்டும்’ இபிஎஸ் வலியுறுத்தல்

சென்னை, ஜன.20

“சமூக ஆர்வலர் ஜெகபர் அலி இறப்புக்கு நீதி வேண்டும். கனிமவளக் கொள்ளையர்கள் மட்டுமின்றி, அவர் கொடுத்த புகார்களின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்த அனைத்து அதிகாரிகளும் அவரது மரணத்துக்கு பொறுப்பு. உரிய விசாரணை நடத்தி, அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக் அவர் தனது சமூகவலைதளப் பக்கத்தில், “புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயம் தெற்கு ஒன்றிய சிறுபான்மை பிரிவு செயலாளரும், முன்னாள் அஇஅதிமுக ஒன்றிய குழு உறுப்பினர், புதுக்கோட்டை மாவட்ட அமச்சூர் கபடி கழக செயலாளரும், சமூக ஆர்வலருமான ஜெபகர் அலி, சமூக விரோதிகளால் லாரி ஏற்றிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது

கனிமவளக் கொள்ளை தொடர்பாக, திருமயம் வட்டாட்சியரைச் சந்தித்து புகார் செய்து, 15 நாட்களுக்கும் மேலாக ஆகியும், மாவட்ட கனிமவளத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பலமுறை புகார் செய்தும், மாவட்ட ஆட்சியரிடமே புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல், தற்போது அவரைப் சமூக விரோதிகள் லாரி ஏற்று படு கொலை செய்திருக்கிறார்கள் என்ற செய்தி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இந்தக் கொலைக் குற்றத்தின் பின்னணியில் உள்ள உண்மையான குற்றவாளிகள், கனிமவளக் கொள்ளையர்களை விட்டுவிட்டு, லாரி டிரைவர் உள்ளிட்டவர்களை மட்டும் கைது செய்து வழக்கை திசை திருப்பி வருகிறது இந்த விடியா அரசு.

கனிமவளக் கொள்ளையர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், புகார் அளித்தவரைக் காட்டிக் கொடுத்து, மிக மிக மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறது திமுக அரசு.

ஜெகபர் அலி இறப்புக்கு நீதி வேண்டும். கனிமவளக் கொள்ளையர்கள் மட்டுமின்றி, அவர் கொடுத்த புகார்களின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்த அனைத்து அதிகாரிகளும் அவரது மரணத்திற்குப் பொறுப்பு. உரிய விசாரணை நடத்தி, அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று வலியுறுத்தியுள்ளார்.

# மழை பாதிப்பு; டெல்டா விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் நிவாரணம்: சிபிஎம் வலியுறுத்தல்

சென்னை, ஜன.20

பருவம் தவறிய மழையால் டெல்டா மாவட்டங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் அழுகி சேதமடைந்த நிலையில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 35 ஆயிரம் நிவாரணம் வழங்கிட வேண்டும். மேலும், நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் நெல் 17 சதம் ஈரப்பதம் இருந்தால் எடுப்பது என்ற வழக்கத்தை மாற்றி 22 சதம் வரை உயர்த்தி நெல் கொள்முதல் செய்திட வேண்டுமென தமிழக அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.



இது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்ட அறிக்கையில், “காவிரி டெல்டா மாவட்டங்களில் பருவம் தவறி பெய்த கனமழையின் காரணமாக அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழுகிப் போயுள்ளது.

குறிப்பாக, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த 1 லட்சம் ஏக்கர் நெற்பயிர்களும், ஊடுபயிராக பயிரிடப்பட்ட உளுந்து, பாசி பயிர்களும் நீரில் மூழ்கி சேதம் அடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் தங்களது ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தையும் இழந்து நிர்க் கதியான நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.

எனவே, தமிழ்நாடு அரசு, மழை வெள்ள பாதிப்ப டைந்த பகுதிகளை உடனடியாக பார்வையிட்டு கணக்கிடுவதுடன், பாதிக்கப் பட்ட நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 35 ஆயிரமும், பிற பயிர்களுக்கு அதன் பாதிப்புகளுக்கு ஏற்றவாறு தமிழ்நாடு அரசு இழப்பீடு வழங்கிட வேண்டுமென மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

மேலும், நேரடி நெல்கொள் முதல் நிலையத்தில் நெல் 17 சதம் ஈரப்பதம் இருந்தால் எடுப்பது என்ற வழக்கத்தை மாற்றி 22 சதம் வரை உயர்த்தி நெல்கொள்முதல் செய்திட வேண்டுமென்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழக அரசை வலியுறுத்துகிறது.” எனத் தெரிவித்துள்ளார்.

# இளையான்குடியில் மத்திய மாநில அரசுகளை கண்டித்து போராட்டம்

சிவகங்கை ஜன20

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் கண்டன ஆர்ப்பாட்டம் ஐந்திணை மக்கள் கட்சியின் சிவகங்கை கிழக்கு மாவட்ட செயலாளர் தோழர் சீத்தூரணி மு.இராசு தலைமையில் நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்றக்கூட்டத்தொடரில் புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்துப்பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்தும், உத்திரபிரதேச மாநிலம் சம்பால், ஞானவாதி இசுலாமிய வழிபாட்டுத் தலங்களை தொல்லியல் ஆய்வு என்ற பெயரில் இடிக்கத் துடிக்கும் பாசிச பா.ச.க. அரசைக் கண்டித்தும் ,விவசாய நிலங்களை அழித்து மதுரை அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தின் மூலம் கார்ப்பரேட் கம்பெனிகளுக்குத் துணைபோகும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், பல்கலைக்கழகங்களின் துணைவேந்தரை மாநில ஆளுநரே நியமிக்க வழிவகை செய்யும் வகையில் யூ.ஜி.சி விதிகளைத் திருத்தம் செய்ய முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்தும்,தமிழ்நாட்டிலுள்ள அரசுப்பள்ளிகளை தனியார்ப் பள்ளிகளுக்குத் தத்துக்கொடுக்கும் கொடுக்கும் முயற்சியை தமிழ்நாடு அரசு கைவிடக்கோரியும் கோஷமிட்டனர்.

மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்டத் தலைவர் தோழர் துல்கருணை சேட், திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் தோழர் பெரியார்முத்து, ஐந்திணை மக்கள் கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளர் தோழர் ஆரோ.ஸ்டீபன்ராஜ், தலைமை ஒருங்கிணைப்பாளர் தோழர் வை.தேவதாசு, தமிழ்த்தேச மக்கள் முன்னணியின் தலைவர் தோழர் மீ.த. பாண்டியன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

இறுதியாக, கட்சியின் சிவகங்கை மேற்கு மாவட்ட செயலாளர் தோழர் பிச்சை முத்து நன்றி கூறினார்.

ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் தோழர் சந்திரசேகர், மாவட்டக் குழு உறுப்பினர் தோழர் திருநாவுக்கரசு, தோழர் ஞா.ஜோசப், காளையார்கோயில் ஒன்றியச் செயலாளர் தோழர் பிரபாகரன், இராமநாதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தோழர் சக்திவேல், தகவல் தொழில்நுட்பப் பாசறையின் தோழர் ச.பிரபாகரன் மற்றும் கிளை நிர்வாகிகள், ஆதரவாளர்கள் எழுச்சியோடு கலந்துகொண்டனர்.



திண்டுக்கல் ஊராட்சி சீலப்பாடி ஊராட்சி செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் புகைப்படக் கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# இஸ்ரேல் ஹமாஸ் போர் நிறுத்தம் 3 பிணைக் கைதிகள், 90 பாலஸ்தீனர்கள் விடுவிப்பு

காசா, ஜன.20

இஸ்ரேல் ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வந்த நிலையில் முதல் நாளில் 3 பிணைக் கைதிகளை ஹமாஸும், பதிலுக்கு 90 பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேலும் விடுவித்தன. முதல் நாளாக இரவுப் பொழுது குண்டு மழை, துப்பாக்கி தாக்குதல்கள் இல்லாமல் காசா மக்கள் கழித்தனர். குறிப்பாக மனிதாபிமான உதவிப் பொருட்களுடன் 630 டிரக்குகள் காசாவுக்குள் சென்றன. இவற்றில் 300 டிரக்குகள் போரால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட வடக்கு காசாவுக்குள் சென்றன.



முன்னதாக, இஸ்ரேல் ஹமாஸ் தீவிரவாதிகள் இடையே கடந்த ஓராண்டுக்கும் மேலாக நீடித்து வந்த போரில் பாலஸ்தீனர்கள் 47,000 பேர் உயிரிழந்தனர். இருதரப்பு இடையேபோர் நிறுத்தம் ஏற்படுத்த கத்தார், அமெரிக்கா சார்பில் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பிணைக் கைதிகளை விடுவித்தால் போரை நிறுத்துவதாக இஸ்ரேல் நிபந்தனை விதித்தது.

இந்நிலையில், பிணைக் கைதிகள் பட்டியலை அனுப்ப ஹமாஸ் தாமதப்படுத்தியதால் 3 மணி நேரம் தாமதமாக போர் நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வந்தது. போர் நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வருவது தாமதமானதால் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது இதில் 13 பேர் கொல்லப்பட்டனர்.

‘துப்பாக்கிகள் மவுனித்துள்ளன..’ போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறுகையில், “இறுதியாக மிகுந்த வலி, பேரழிவு, உயிரிழப்புகளுக்குப் பின்னர் இன்று காசாவில் துப்பாக்கிகள் மவுனித்துள்ளன, முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் குறைந்தது 2 அமெரிக்கர்களையாவது ஹமாஸ் விடுவிக்கும்” என்றார்.

# கோயில்களின் வளர்ச்சிக்கு ரூ.8,37.14 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது

## இந்து சமய அறநிலையத் துறை தகவல்

சென்னை, ஜன.20

தமிழகத்தில் உள்ள கோயில்களுக்கு ஆண்டுக்கு ரூ.5,900 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக எழுந்த குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. கோயில்களின் வளர்ச்சிக்கு திமுக அரசு ரூ.8,37.14 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத் துறை தெரிவித்துள்ளது.




‘இந்து சமய அறநிலையத் துறையின் மோசமான நிர்வாகத்தால் தமிழகத்தில் கோயில்களுக்கு ஆண்டுக்கு ரூ.5,900 கோடி வரை இழப்பு ஆலய வழிபடுவோர் சங்கம் குற்றச்சாட்டு’ என்ற தலைப்பில் நேற்று `இந்து தமிழ் திசை’ நாளிதழில் செய்தி வெளியாகி இருந்தது. இதற்கு மறுப்பு தெரிவித்து அறநிலையத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கடந்த ஆட்சியில் 10 ஆண்டுகளாக கோயில்களில் அறங்காவலர்கள் நியமிக்கப்படவில்லை. திமுக அரசு பொறுப்பேற்று பின்னர் 38 மாவட்டங்களுக்கு 38 குழுக்கள் நியமனம் செய்யப்பட்டு, கோயில் களில் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். தற்போது வரை 8,511 கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கோயில்களின் நிர்வாகமும் அறங்காவலர்களால்தான் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோயில்களில் செயல் அலுவலர்கள் பூஜை மற்றும் மத ரீதியான சடங்குகள் எதிலும் தலையிடுவதில்லை.

மண்டல, மாநில வல்லுநர் குழுவின் ஒப்புதலோடு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, உரிய அனுமதி பெற்று, கோயில் நிதி, அரசு மானியம், ஆணையர் பொது நலநிதி, உபயதாரர் நிதி மூலமாக கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின் படியே ஒப்பந்தம் கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகரிப்பட்டு வருகின்றன. அறநிலையத் துறையின் கீழ் 8,321 கோயில்கள் மட்டுமே, வருமானத்தின் அடிப்படையில் 5 முதல் 12 வரை சதவீதம் நிர்வாகச் செலவினங்களுக்காகவும், 1.5 முதல் 4 சதவீதம் வரை தணிக்கை செலவினங்களுக்காகவும் நிர்ணயம் செய்யப்படுகிறது.

நிதி வசதியில்லாத இதர கோயில்களுக்கு இத் தொகை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. தற்போது வரை 916 கோயில்களுக்குச் சொந்தமான, ரூ.7,127.25 கோடி மதிப்பிலான 7387.79 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இந்நிலையில், கோயில் சொத்துக்கள் மூலம் ரூ.6 ஆயிரம் கோடி வருமானம் ஈட்டப்பட வேண்டும் என்று தெரிவித்திருப்பது, எவ்வித ஆதாரமும் இல்லாத, உண்மைக்குப் புறம்பான தகவலாகும். திமுக அரசு பொறுப்பேற்றது முதல் தற்போது வரை அறநிலையத்துறையின் அசையா சொத்துக்கள் மூலம் ரூ.945.68 கோடி வருவாய் ஈடுபட்டப்பட்டுள்ளது.

மேலும், 98 கற்சிலைகள், 230 உலோக சிலைகள், 11 மரச்சிலைகள், 4 மரகத லிங்கங்கள் மீட்கப்பட்டுள்ளன. கோயில்களின் உபரிநிதி முதலீடு கடந்த ஆட்சியைவிட 1.06 மடங்கு உயர்ந்துள்ளது. ரூ.5515.54 கோடி மதிப்பில், 12,202 கோயில்கள் 23,234 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் 3,493 கோயில்களில், ரூ.1,260.76 கோடி மதிப்பிலான பணிகள், உபயதாரர் நிதி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 3 ஆண்டுகளில் 2,378 கோயில்கள் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. மேலும், 1,000 ஆண்டுகளுக்கு பழமையான 274 கோயில்களை புனரமைக்க ரூ.300 கோடி நிதியை அரசு மானியமாக வழங்கியுள்ளது.

அதேபோல, திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் 21 கோயில்களுக்குச் சொந்தமான, ரூ.880 கோடி மதிப்பிலான 1,100 கிலோ தங்கக்கட்டிகள் தங்க முதலீட்டு திட்டத்தின் கீழ் வைப்பீடு செய்யப்பட்டு, ஆண்டுதோறும் ரூ.18 கோடி வட்டி வருவாய் ஈட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோயில்களின் வருவாய் அரசால் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. கோயில்களின் வளர்ச்சிக்காகவும், பராமரிப்புக்காகவும் அரசால் நிதி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை கோயில்களுக்கு ரூ.8,37.14 கோடி அரசு நிதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காதலனை கொன்ற கேரள பெண்ணுக்கு மரண தண்டனை: நீதிமன்றம் தீர்ப்பு

திருவனந்தபுரம், ஜன.20

காதலனை விஷம் கொடுத்து கொன்ற கேரள பெண்ணுக்கு மரண தண்டனை விதித்து கேரளாவின் நெய்யான்றின்கரை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கில் கரீஸ்மா கொலை குற்றவாளி என கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் அவருக்கான தண்டனை விவரம் நேற்று (ஜன.20) அறிவிக்கப்படுள்ளது.



கன்னியாகுமரியில் வசித்த இளம் பெண் கரீஸ்மா. இவர் கடந்த 2021ம் ஆண்டு முதுநிலை பட்டப்படிப்பு படித்தபோது, இளநிலை 3ம் ஆண்டு படித்த ஷரோன் ராஜ் என்ற மாணவருடன் நட்பு ஏற்பட்டது. இவர் திருவனந்தபுரம் பாரசாலா பகுதியைச் சேர்ந்தவர். இருவரும் காதலர்களாக இருந்தனர். இந்நிலையில் கரீஸ்மாவுக்கு, ராணுவ அதிகாரி மாப்பிள்ளையை கரீஸ்மாவின் பெற்றோர் நிச்சயம் செய்தனர். இதற்கு கரீஸ்மாவும் சம்மதித்தார்.

இரண்டு முயற்சிகள்.. காதலன் ஷரோன் ராஜ் உடனான தொடர்பை துண்டிக்க, பல வழிகளை கரீஸ்மா யோசித்தார். ஷரோன் ராஜை ரகசியமாக கொலை செய்ய முடிவு செய்தார். சக்தி வாய்ந்த வலி நிவாரண மாத்திரைகளை கொடுத்து கொல்வதற்காக, அதன் விவரங்களை இணையதளத்தில் தேடினார். ஒரு முறை பல மாத்திரைகளை குளிர்பானத்தில் கலந்து கொடுத்தார். ஆனால் பலன் அளிக்கவில்லை.

கடந்த 2022ம் ஆண்டு அக்டோபர் 14ம் தேதி ஷரொன் ராஜை வீட்டுக்கு அழைத்தார் கரீஸ்மா. மூலிகை விஷங்களை கலந்து ஆயூர்வேத பானம் என ஷரோன் ராஜ்க்கு கரீஸ்மா கொடுத்தார். ஆயுர்வேத பானம் கசப்பாகத்தான் இருக்கும் என நினைத்து அதை ஷரோன் ராஜ் குடித்தார். தனது வீட்டுக்கு சென்றதும் இரவில் பலமுறை வாந்தி எடுத்தார். திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஷரோன் ராஜ் , உடல் பாகங்கள் செயல் இழந்து சில நாட்களில் இறந்தார். இதையடுத்து அவரது குடும்பம் கரீஸ்மா மீது புகார் அளித்தது. விசாரணையில் கரீஷ்மா விஷம் கொடுத்தது உறுதியானது.

இந்நிலையில் அவர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து தற்போது அவருக்கு மரண தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது, முன்னதாக க்ரீஷ்மாவின் வயதைக் கருத்தில் கொண்டும், அவர் திருந்தி வாழ தயாராக இருப்பதை சுட்டிக் காட்டியும் அவருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டாம் என அவரது வழக்கறிஞர் சார்பில் கோரப்பட்டிருந்தது.

# சென்னை, புறநகரில் விடிய விடிய மழை அதிகபட்சமாக புழலில் 6 செமீ பதிவு

சென்னை, ஜன.20

சென்னை, புறநகர் பகுதிகளில் நேற்று அதிகாலை விடிய, விடிய மழை பெய்தது. அதிகபட்சமாக புழலில் 6 செமீ மழை பதிவாகியுள்ளது. ஆண்டு தோறும் வழக்கமாக ஜனவரி முதல் அல்லது 2வது வாரத்தில் வடகிழக்கு பருவமழை முடிவுக்கு வரும்.



ஆனால் இந்த ஆண்டு கடந்த ஜன.13 முதல் தீவிரமடைந்து ஆங்காங்கே கனமழை பெய்து வருகிறது. சென்னை, புறநகர் பகுதிகளில் பொங்கலுக்கு முன்பாக சாரல் மழை பெய்து வந்த நிலையில், பொங்கல் முடிந்த பிறகு, நேற்று முன்தினம் மாலையில் இருந்து லேசான சாரல் மழை பெய்து வந்தது.

இந்நிலையில் நேற்று அதிகாலை முதல் விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகள், பூங்காக்கள் போன்றவற்றில் மழைநீர் தேங்கியது. காலையில் அனைத்து இடங்களிலும் மழைநீர் வடிந்ததால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. காலை முதலே மாநகர், புறநகர் பகுதிகளில் குளிர்ச்சியாக, ரம்மியமான சூழல் நிலவியது.

மேலும் நேற்று காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக சென்னை புழலில் 6 செமீ, நுங்கம்பாக்கம், தரமணி, திருவொற்றியூர், ஆலந்தூர், சென்னை விமானநிலையம், மீனம்பாக்கம், அமைந்தக்கரை, பூந்தமல்லி ஆகிய இடங்களில் தலா 5 செமீ, மடிப்பாக்கம், பெரம்பூர், மணலி, மாதவரம் ஆகிய இடங்களில் தலா 4 செமீ, அடையார், மதுரவாயல், எண்ணூர், சோழிங்கநல்லூர், அண்ணாநகர் மேற்கு, ராஜா அண்ணாமலைபுரம், கொளத்தூர், அயப்பாக்கம், உத்தண்டி, அயனாவரம், எம் ஜி ஆர் நகர், செம்பரம்பாக்கம், வடபழநி, தண்டையார்பேட்டை, ஐஸ் ஹவுஸ், அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161